OS No.93/2018, நாள்: 13.11.2019

போச்சம்பள்ளி மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. சாட்சி திறந்த நீதிமன்றத்தில் அழைக்கப்பட்டு ஆஜர். நீதிமன்றத்தில் உதவியாளர் திருமதி.சரஸ்வதி அவரால் சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டது. உரிமையியல் விசாரணை சட்டம் பிரிவின் கீழ் விசாரணை செய்யப்பட்டார்.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : பெரியதம்பி | வயது | : 62 |
| தந்தை பெயர் | : குப்புசாமி | வேலை | : விவசாயம் |
| கிராமம் | : அகரம் | நாட்டினம் | : இந்து |
| தாலுக்கா | : போச்சம்பள்ளி | சாதி | : நைனார் |

<u>வா.சா.1 ___ பெரியதம்பி ஆஜர், முதன்மை விசாரணை :-</u>

நான் இவ்வழக்கில் வாதி. மேற்படி நான் என்னுடைய பிரமாண வாக்கு மூலத்தை தாக்கல் செய்கிறேன். அதை என்னுடைய முதல் விசாரணையாக ஏற்கவேண்டுகிறேன். 18.02.1996ம் தேதியிட்ட திரௌபதியம்மன் கோவில் ஸ்ரீமாபாரத சொற்பொழிவு தீமிதி விழா அழைப்பிதழ் அசல் வா.சா.ஆ.1 ஆகும். 16.03.1980ம் தேதியிட்ட திரௌபதியம்மன் கோவில் ஸ்ரீமாபாரத சொற்பொழிவு தீமிதி விழா அழைப்பிதழ் அசல் வா.சா.ஆ.2 ஆகும். கோவில் கணக்கு புத்தகம் வா.சா.ஆ.3 ஆகும். (வாதி மைனராக இருந்த காலத்தில் நடைபெற்றதாக சொல்லப்படும் அழைப்பிதழ்கள் என்றுதான் அனைத்து ஆவணம் என்று ஆட்சேபனையின் பேரில் குறியீடு செய்யப்பட்டது.)

ஒம்./-ஏ. செல்வகுமார்,பி.இ.,பி.எல்.,
மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நடுவர், போச்சம்பள்ளி.